**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவரவர்களே, அதுபோன்ற வழக்குபற்றி எதுவும் தகவல் கொடுத்தால் அதைப்பற்றி விசாரிக்கின்றேன்.

*Movement of rice.*

* 316. *Q.*—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(*a*) whether the State Government have sought the Co-operation of the Railways to check illicit movement of rice ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) கள்ளத்தனமாக அரிசி கடத்திச் செல்லப்படுவதைத் தடுக்க வருவாய்த் துறை அலுவலர்களும், கண்காணிப்புக் காவற் குழுவினரும் ரயில்களை நிறுத்திச் சோதனையிட்டு வந்தனர். இதனால், ரயில்கள் உரிய நேரத்தில் வருவது பாதிக்கப்பட்டது. ரயில்கள் ஓடிக் கொண்டிருக்கையிலேயே சோதனை முழுவதையும் முடித்து விடலாம் என்று ரயில்வே பொது மேலாளர் கருத்துத் தெரிவித்ததோடு வருவாய்த் துறை அலுவலர்கள், கண்காணிப்புக் காவற்குழுவினர் ஆகியோர் ரயில்களில் பயணம் செய்ய இயலும் வகையில் அவர்களுக்குப் பயண இசைவுச் சீட்டுகளை வழங்கவும் அவர் ஒப்புக் கொண்டார். இந்த ஏற்பாட்டினை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

(முற்பகல் 10-00)

Thiru B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Revenue, whether any seizure has been made in Railways?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேள்வி ரயில்வே துறையோடு நாம் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதைப் பற்றியது. எவ்வளவு டன் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ரயில்வே மூலமாக அரிசியை மற்றப் பகுதிகளுக்கு அனுப்ப அரசு ஏற்பாடு செய்திருந்தாலும் இன்னும் பல இடங்களில் ஸ்டாக் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட ஸ்டாக்குகளைத் துரிதமாக வெளியேற்ற அரசாங்கம் ஆவன செய்யுமா?

1975 நவம்பர் 12]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது கள்ளத்தனமாக அரிசியைக் கடத்திச் செல்லுவதைப் பற்றிய கேள்வி. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை அரிசியை மற்றப் பகுதிகளுக்கு அனுப்ப ரயில்வே துறை உதவி செய்திருக்கிறது. வேகன் லோடு என்ற முறையில் ஏராளமான நெல் அனுப்பப்பட்டிருக்கிறது. அதோடு ஆயிரத்துக்கு மேற்பட்ட லாரிகளில் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப்:** கள்ளத்தனமாக அரிசி கடத்தப்படுவதை அரசு பிடித்தாலும்கூட, சொந்த உபயோகத்திற்கு என்று பத்து கிலோ வரை எடுத்துச் செல்லுகிறவர்களை அனுமதிக்க, குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து சென்னைக்குச் சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் செல்லுவதை அனுமதிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சொந்த உபயோகத்திற்கு ஓரளவு எடுத்துச் செல்லும் அளவை நிர்ணயித்திருக்கிறார்கள். கொண்டு வரும்போது சில சமயம் தகராறு ஏற்பட்டு விடுகிறது. கடத்தல்காரர்கள், சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டு வருகிறவர்கள் என்ற முறையில் பார்த்து கடத்தல்காரர்களைப் பொறுத்தவரை மட்டும் கண்டிப்பாக இருக்கவேண்டும். சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் செல்லுகிறவர்களைத் தடுக்க வேண்டாம் என்று அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பொதுமக்களுக்குத் தொல்லை ஏற்படாதவாறு கடத்தல்காரர்களை மட்டும் பிடிக்க வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** தஞ்சையிலிருந்து இராமநாதபுரத்திற்கு ஒதுக்கப்பட்ட அரிசியைக் கொண்டு வர தனியார் காண்டிராக்ட் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா அல்லது அரசாங்கமே நேரடியாக லிஃப்ட் செய்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** லாரி சொந்தமாக வைத்திருப்பவர்கள் இதற்கு முன்வர வேண்டுமென்று கோரிய டெண்டருக்கு யாரும் வரவில்லை. ஆகவே, டெண்டரில் என்ன தொகையோ அந்தத் தொகைக்கு எந்த லாரிக்காரர் வந்தாலும் சரி அவர்கள் மூலம் அனுப்பத் திட்டமிட்டோம். அதற்கும் யாரும் வரவில்லை. பிறகுதான் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் சொல்லி " உங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நெல்லை

நீங்களே எடுத்துச் செல்ல, உங்கள் மாவட்ட லாரிகளை எல்லாம் சட்டத்தைப் பயன்படுத்தி லாரிகளைக் கைப்பற்றி நெல்லை எடுத்துச் செல்லுங்கள்" என்று கூறினோம். அதன் விளைவாக ஏராளமான நெல் மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது.

*Price list of commodities.*

* 317 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of shop owners arrested during the month of July and August 1975 for not displaying the list of commodities and their prices in front of their shops?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பதினைந்து.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இப்போது பிரைஸ் லிஸ்ட் மட்டுமல்லாது ஸ்டாக் லிஸ்டும் வைக்க வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறதே. ஆனால் அந்த மாதிரி ஸ்டாக் லிஸ்ட் வைப்பதாகத் தெரியவில்லையே. ஸ்டாக் லிஸ்ட் கண்டிப்பாக வைக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த உத்தரவைப் பொறுத்தவரை அமல் நடத்துவது சிரமமான காரியம். ஒவ்வொரு கடையிலும் உள்ள பல பொருள்களின் ஸ்டாக்கை ஒவ்வொரு நாளும் எழுதிக் கொண்டிருப்பது இயலாத காரியம். ஆகவே, ஜாக்கிரதையாகச் சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படாத அளவுக்கு அமல் நடத்த வேண்டியிருக்கிறது. விலைப் பட்டியல் வைக்க வேண்டுமென்பது கட்டாயப்படுத்தப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: Sir, the Hon. Minister for Revenue in his reply said that fifteen persons have been arrested so far. May I know whether there is any proposal on the part of the Government to insist the necessity of displaying the price lists along with the name boards in shops? If so, whether it will be extended to the vegetables also?

MR. DEPUTY SPEAKER: The hon. Member is asking a supplementary question about vegetables which did not relate to the main question. Therefore, I am not allowing that part of the question relating to vegetables.